செ.பெ வ.எண்: 969/2017 நாள்: 14.12.2017

**ஓகி புயலால் பாதிக்கப்பட்ட கடற்கரை கிராம இளைஞர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்- 4 தேர்வுக்கான இலவசப் பயிற்சி நடைபெறவுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையமானது இளநிலை உதவியாளர், தட்டச்சர், கிராம நிர்வாக அலுவலர், நில அளவையர், மற்றும் வரைவாளர் ஆகிய பணிகளுக்கான 9351 பணிக்காலியிடங்களை அறிவித்துள்ளது. இத்தேர்வுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நாகர்கோவில் கோணத்தில் அமைந்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஏற்கனவே நடைபெற்று வருகிறது. மேலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் இப்போட்டித் தேர்வுக்கு ஓகி புயலால் பாதிக்கப்பட்ட கடற்கரை கிராம இளைஞர்கள் பயனடையும் வகையில் நாகர்கோவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தூத்தூர் புனித யூதா கல்லூரியும் இணைந்து இலவச பயிற்சி வகுப்பினை 15.12.2017 முதல் 03.02.2018 வரை தூத்தூர் புனித யூதா கல்லூரியில் வைத்து நடத்த திட்டமிட்டுள்ளது.

மேற்படி போட்டித் தேர்வுக்கு விண்ணப்பம் செய்தவர்கள் இச்சிறப்பு இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு திறம்பட பயிற்சி பெற்று போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற்று பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இப்பயிற்சி வகுப்பானது வார நாட்களில் திங்கள் முதல் வெள்ளி வரை மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரையிலும் சனிக்கிழமைகளில் காலை முதல் மாலை வரையிலும் நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் வேலைவாய்ப்பு அடையாள அட்டை, சாதிச் சான்றிதழ், ஆதார்கார்டு, குரூப்- 4 தேர்வுக்கு விண்ணப்பம் செய்த நகல் மற்றும் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஆகியவற்றுடன் புனித யூதா கலைக் கல்லூரிக்கு 15.12.2017 அன்று பிற்பகல் 2.00 மணிக்கு நேரில் வருகை தருமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்**